நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீன் திங்கள் 17–ம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 642 / 2025

CNR.No.TNTT07-005680-2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | நாலாட்டின்புதூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.165/2025 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரியின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | திலீபன் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | நீதி |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | வி.பி.சிந்தன் நகர், மொட்டமலை, நாலாட்டின்புதூர், தூத்துக்குடி. |
| 7 | வயது | 33/2025 |
| தேதி | | |
| 8 | சம்பவம் | 16.06.2025 |
| 9 | புகார் | 20.06.2025 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரி கடந்த 17.06.2025 அன்று கைது செய்யப்பட்டுள்ளார் |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 17:55:43 +0530

| | | |
|---|---|---|
| 11 | பிணை விபரம் | எதிரி கடந்த 27.06.2025 ஆம் தேதி Crl.M.P. No.1031/2025–ல் இந்நீதிமன்றத்தில் பிணை பெற்றுள்ளார். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 15.10.2025 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 16.06.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை BNS பிரிவு 304(2) படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து BNSS பிரிவு 271(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 15.09.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ஆனந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 16.06.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரி மீது நாலாட்டின்புதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 16.06.2025 அன்று சாட்சி 2 அரசன், சாட்சி 1 பவித்ராவை TN 69 BE 3915 என்ற பதிவெண் கொண்ட TVS Star City பைக்கில் ஏற்றிக் கொண்டு கோவில்பட்டி –

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:55:48 +0530

திருநெல்வேலி NH சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருக்கும் போது சாட்சி 1ற்கு அவசரமாக ரெஸ்ட் ரூம் வந்ததால் இரவு சுமார் 09.00 மணிக்கு மேற்படி ரோட்டிலுள்ள A.S.L.R. காபி கடைக்கு அருகே வண்டியை நிறுத்தி சாட்சி 1 கையில் செல்போனுடன் வண்டியிலிருந்து இறங்கி நின்ற போது பின்னால் TN 67 H 9679 Super Splender பைக்கில் வந்த எதிரி, சாட்சி 1 கையில் வைத்திருந்த சுமார் ரூ.8,000/– மதிப்புள்ள Redmi ஆண்ட்ராய்டு கருப்பு கலர் செல்போனை பறித்துச் சென்றதாக நாலட்டின்புதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது BNS பிரிவு 304(2) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230ன் படி கடந்த 15.10.2025 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது BNS பிரிவு 304(2) படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 22.10.2025 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து BNSS பிரிவு 263ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான சான்றாவணங்களும், அசா.பொ.1 மற்றும் அசா.பொ.2 சான்றுப் பொருள்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) அசா.1 பவித்ரா, அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று மட்டும் சாட்சியமளித்துள்ளார். அசா.2 தனது சாட்சியத்தில், ஆஜர் இல்லாத

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 17:55:55 +0530

எதிரியை தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அசா.3 தனது சாட்சியத்தில், ஆஜர் இல்லாத எதிரியை தனக்கு தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பங்கள் முறையே அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4 தன்னுடையது என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அசா.4 தனது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையது இல்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார். கடந்த 16.06.2025 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு பெண் தலைமை காவலர் கிருஷ்ணவேணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா.1 பவித்ரா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அசா.ஆ.1 புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.165/2025, BNS பிரிவு 304(2) ஆக அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

5) அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அசா.5, அன்றைய தினம் 22.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பையா மற்றும் முத்துகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 17.06.2025 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு வாகன தணிக்கை செய்த போது கழுகுமலை – நாலாட்டின்புதூர் ரோட்டில் மேற்கேயிருந்து கிழக்கு நோக்கி TN 67 H 9679 Super Splender வாகனத்தில் வந்த எதிரியை விசாரிக்க முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்து பின் பெயர், முகவரியைக் கூறியுள்ளார். பின்னர் எதிரியை கைது செய்து காலை 10.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து அசா.3 மாரிசரவணன் மற்றும் அசா.4 முத்துராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரி காலை 10.15 மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து அசா.பொ.1 மேற்படி இருசக்கர வாகனம் மற்றும் அசா.பொ.2 Redmi செல்போனை அசா.ஆ.9 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி அசா.ஆ.10 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 17:56:01 +0530

பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 20.06.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 16.06.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

7) அரசுத் தரப்பில், எதிரி அசா.1ன் செல்போனை பறித்துச் சென்றதாக எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

8) மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரியைத் தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இந்நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 பவித்ரா தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகாரை என்னுடைய Redmi செல்போன் கோவில்பட்டி ரயில்வே நிலையம் அருகே காணாமல் போனதால் புகார் கொடுத்தேன். அந்த புகாரில்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:56:05 +0530

அறிவேன் சாட்சியாக எனது அண்ணன் அரசனும் கையொப்பம் செய்துள்ளார். **(அந்த புகார்மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார். அசா.2 தனது சாட்சியத்தில்

"1.... ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியாது. அசா.1 எனது தங்கை. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த புகாரை என்னுடைய தங்கை Redmi செல்போன் கோவில்பட்டி ரயில்வே நிலையம் அருகே காணாமல் போனதால் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார். அசா.3 தனது சாட்சியத்தில் ஆஜர் இல்லாத எதிரியை தனக்கு தெரியாது என்றும், மொபைல் திருடு போனது சம்பந்தமாக நாலாட்டின்புதூர் காவல் நிலைய போலீசார் கையொப்பம் கேட்டதால் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள அசா.ஆ.3, அசா.ஆ.4 முதல் கையொப்பங்களை நாலாட்டின்புதூர் பட்டறை பஸ் ஸ்டாப் அருகே வைத்து செய்து கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். அசா.4 தனது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையது இல்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

9) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அசா.4 ஆகியோர் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், அசா.1 முதல்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 17:56:09 +0530

அசா.4 ஆகியோர் அவர்களது குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி செல்போனை பறித்துச் சென்றதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. வழக்கு சம்பவம் கோவில்பட்டி – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் நடந்துள்ளதாக அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில், கோவில்பட்டி ரயில் நிலையத்தில் வைத்து சம்பவம் நடந்ததாக அசா.1, அசா.2 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. எதிரியின் அடையாளத்தை அரசு தரப்பு சாட்சிகள் உறுதிப்படுத்தவில்லை.

10) மேலும், காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில், நாலாட்டின்புதூர் பட்டறை பஸ் ஸ்டாப் அருகே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக அசா.3 சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. எதிரியின் அடையாளத்தை அசா.3 உறுதிப்படுத்தவில்லை என்பதால் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியை எதிரிக்கு எதிராக பயன்படுத்த முடியாது. இந்நிலையில் அ.சா.1 முதல் அசா.4 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்திலும், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரியைத் தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) முடிவில் அரசு தரப்பில் எதிரி மீது BNS பிரிவு 304(2) படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி அல்ல என BNSS பிரிவு 271(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 17:56:14 +0530

12) இவ்வழக்கில் பி.ஆர்.எண்.312/2025 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.பொ.1, அசா.பொ.2 யை அதன் உரிமையாளர்கள் உரிய மனு செய்து பெற்றுக் கொள்ளவும், தவறும் பட்சத்தில் அரசுக்கு ஆதாயப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

13) இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி BNSS பிரிவு 481 ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீன் திங்கள் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:56:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | செல்வி. பவித்ரா | நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி |
| 2. | திரு. அரசன் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திரு. மாரிசரவணன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 4. | திரு. முத்துராஜ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:56:26 +0530

| | | |
|---|---|---|
| 5. | திரு. மாரியப்பன் (உதவி ஆய்வாளர், நாலாட்டின்புதூர் காவல் நிலையம்) | புலன்விசாரணை அதிகாரி சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் மனு – 16.06.2025 | அ.சா.1 – 06.05.2026 | அசல் |
| 2 | புகார் மனுவில் உள்ள அசா.2 ன் அறிவேன் சாட்சி கையொப்பம் – 16.06.2025 | அ.சா.2 – 07.05.2026 | அசல் |
| 3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.3 ன் முதல் கையொப்பம் – 17.06.2025 | அ.சா.3 – 01.06.2026 | அசல் |
| 4 | அத்தாட்சியில் உள்ள அசா.3 ன் முதல் கையொப்பம் – 17.06.2025 | அ.சா.3 – 01.06.2026 | அசல் |
| 5 | முதல் தகவல் அறிக்கை – 16.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |
| 6 | பார்வை மகஜர் – 16.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |
| 7 | மாதிரி வரைபடம் – 16.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |
| 8 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி – 17.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |
| 9 | அத்தாட்சி – 17.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:56:32 +0530

| | | | |
|---|---|---|---|
| 10 | படிவம் 91 – 17.06.2025 | அ.சா.5 – 12.06.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:**

| சான்றுப் பொருள் எண் | சான்றுப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் மூலம் / சான்றளித்தவர் மூலம் |
|---|---|---|
| 1. | பி.ஆர்.எண்.312/2025 வரிசை எண்.1ல் தாக்கல் செய்யப்பட்ட அசா.பொ.1 TN 67 H 9679 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு, சில்வர் நிற Super Splender இருசக்கர வாகனம் – 17.06.2025 | அ.சா.5 – 12.06.2026 |
| 2. | பி.ஆர்.எண்.312/2025 வரிசை எண்.2ல் தாக்கல் செய்யப்பட்ட அசா.பொ.2 கருப்பு கலர் Redmi A2 ஆண்ட்ராய்டு செல்போன் – 17.06.2025 | அ.சா.5 – 12.06.2026 |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 17:56:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி